ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். அதேசமயத்தில் உறுப்பினர்களும் கொஞ்சம் சீக்கிரமாகவே தங்கள் அறிவிப்புகளையும் கொடுத்துவிட்டால் நல்லது. இதில் திரு. ‍ ‍மு. ரமணி பெயரும் சேர்த்தாகிவிட்டது.

5. கவன ஈர்ப்புகள்.

அ. (ஈரோடு, வீரம்பாளையம் கிராமத்தில் குடிசைக்குத் தீ வைக்கப்பெற்று ஐந்து பேர்கள் மரணம் அடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி கவுண்டர் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி தீர்மானத்தை மொழிவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஈரோடு அருகில் வீரம்பாளையம் கிராமத்தில் ஒரு வீட்டில் தீ வைக்கப்பட்டு 5 நபர்கள் மரணமடைந்தது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. பெரியார் மாவட்டம், அரச்சலூர் காவல் நிலைய எல்லைக்குள்ளிருக்கும் வீரப்பபாளையம் என்ற கிராமத்தில், 2—7—1980 அன்று நள்ளிரவு முத்துசாமி என்பவரது ஓலை வேய்ந்த வீடானது யாரோ சிலரால் வெளிப்புறமாகப் பூட்டப்பட்டு தீ வைக்கப்பட்டது. இதன் காரணமாக அவ்வீட்டிலிருந்த முத்துசாமி கவுண்டர் (வயது 40) அவருடைய மனைவி பாப்பம்மாள் (வயது 30) அவருடைய 8 வயது மகள், 5 வயது மற்றும் ஒரு வயதான இரண்டு மகன்கள் ஆகியோர் இறந்துவிட்டனர்.

பெரியார் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கிருந்தவர்களிடம் மேற்படி நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்துள்ளார். பாசனத்திற்காக, கீழ்பவானி திட்டக் கால்வாயிலிருந்து தண்ணீரை சென்னியப்பன் என்பவரது, நிலத்தின் வழியாக முத்துசாமியின் நிலத்துக்குக் கொண்டு வருவது பற்றி இறந்தவர்களது குடும்பத்தினருக்கும் சென்னியப்பன் மற்றும் சென்னிமலை கவுண்டர் ஆகியோரது குடும்பத்தினருக்கும் இடையே

1980 ஜூலை 22]

நீண்ட கால பகைமையிருந்து வந்துள்ளதாக விசாரணையிலிருந்து தெரியவருகிறது. இச்சம்பவம் குறித்து அரச்சலூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 325/80-ல் இ.பி.கோ. 436 மற்றும் 302 பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடந்து வருகிறது. மேற்படி நிகழ்ச்சியினால் வீரப்பம்பாளையம் கிராமத்திலோ அல்லது அதன் சுற்றுப்புற கிராமங்களிலோ சட்டம் ஒழுங்கு பிரச்சினை எதுவும் எழவில்லை. பதட்டமான நிலையும் ஏதும் நிலவவில்லை. எனினும் நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9.30]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வீரம்பாளையம் சம்பவத்தின் மூலம் ஐந்து பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சம்பவம் நடப்பது என்பது ரொம்பவும் வருந்தத்தக்கது. இந்தச் சம்பவத்தின் தொடர்பாக அதிகாரிகள் துல்லிதமாக விசாரணை செய்ய வேண்டும். காரணம், சில சம்பவங்களில் முன் சச்சரவுகள் காரணமாக இப்படிப்பட்ட நிலைமைகளைச் செய்திருப்பார்கள் என்று போலீசார் உடனடியாக முடிவு செய்து விடலாம். இந்தச் சம்பவம் நடந்த அன்று தந்தை வீட்டுக்கு வெளியே படுத்திருக்கிறார். அவர் எந்தவிதமான சத்தமும் செய்யாமல் இருந்திருக்கிறார். துல்லியமாக காவல்துறையினர் பரிசீலித்து உண்மையான குற்றவாளி யார் என்று கண்டு பிடிக்கும் முயற்சியில் காவல் துறையினரை ஈடுபடுத்த அரசாங்கம் முன் முயற்சியில் ஈடுபடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று இது ஒரு பயங்கரமான, கேட்பதற்கே வேதனை தரத்தக்க ஒரு சம்பவமாகும். நிரபராதியாக இருக்கிற குழந்தைகள் உட்பட இறப்புக்கு ஆளாக வேண்டிய ஒரு நிகழ்ச்சி உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்று. இதைப் பொறுத்து காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் சென்று பார்வையிட்டு விசாரித்து வருகிறார். புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. சிலபேர் தலைமறைவானவர்கள் தேடப்பட்டு வந்தார்கள். திரு. சுப்பிரமணியம் என்பவர் அரச்சலூர் தோட்டத்தைச் சேர்ந்தவர், வீரப்பபாளையம் கிராம அதிகாரியிடம் சரண் அடைந்து அவரால் காவல் நிலையத்திற்கு 11—7—1980 அன்று காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டார். அவர் தந்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்டு இரண்டு பேர் திரு. ராஜன், பழனிசாமி ஆகிய இருவரும் 12—7—1980-ல் கைது செய்யப்பட்டார்கள். ஆக மூவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடந்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று சூழ்நிலைகள், சாட்சியங்கள்

மற்றவை எல்லாம் தீர விசாரித்து வழக்கை நடத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று அந்த முயற்சியில் காவல் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு அருகே நடந்த நிகழ்ச்சி நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சி. இது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்த நிகழ்ச்சியைப் பொறுத்த அளவில் பத்திரிகையில் வரும் செய்தியைப் பார்க்கும் போது ஒரு வயதுக் குழந்தையைக் காப்பாற்றலாம் என்று சென்ற தாய் குழந்தையை அணைத்தவாறே இறந்திருக்கிறார். இதிலிருந்து அந்தச் சோகத்தை உணர முடிகிறது. இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து போலீஸ் நாய் வரவழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. சென்னியப்பன் என்பவருக்கும் இவருக்கும் ஏற்பட்ட நிலத் தகராறு காரணம் என்று சொன்னார்கள். சென்னியப்பன் என்பவர் கைது செய்யப்பட்டாரா ? எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் ? யாராவது தலைமறைவாக இருக்கிறார்களா ? போலீஸ் நாய் வந்ததன் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறாதவாறு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னபடி புலன் விசாரணையைக் காவல் துறையினர் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக தேடப்பட்டு வந்தவர் சுப்பிரமணியம். அவர் சொன்ன தகவலின் பேரில் ராஜன், பழனிசாமி ஆகிய இரண்டு பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சென்னிமலை கவுண்டர் மகன் ராஜன். பழனிசாமியும் அவர் மகன்தான். இரண்டு பேரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு புலன் விசாரணை நடைபெற்று வருகிறது. யார் யார் இதிலே ஈடுபட்டார்கள் என்பதை ஆராய்ந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க காவல் துறையினர் முயன்று வருகிறார்கள்.

* திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னதான் ஏற்கனவே இருந்த பகையுணர்ச்சி இதற்குக் காரணம் என்றாலும் கூட திட்டமிட்டு பழி வாங்குகிற சதிச் செயலாகத்தான் இது இருக்கிறது என்பதை அறிய முடிகிறது. எதிர் காலத்திலாவது இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காத சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும். இதிலே குற்றவாளி கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இதிலே தக்க நடவடிக்கை எடுக்க அரசு கவனமாக இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1980 ஜூலை 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டபடி இப்படிப்பட்ட சம்பவங்கள் வராமல் தடுக்கின்ற முறையிலேதான் ஆங்காங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் திட்டமிட்டு இந்தக் குற்றத்தைக் குற்றவாளி செய்திருக்கிறார். வீட்டை பூட்டி உள்ளே இருக்கின்றவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தப்பித்துக் கொள்ளமுடியாதபடி செய்திருக்கிறார்கள். வீட்டைப் பூட்டிவிட்ட காரணத்தினால் உள்ளே இருந்தவர்கள் எந்தவகையிலேயும் வெளிவரமுடியாத நிலைமையில் அத்தனை பேர்களும் இறந்து இருக்கிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிறது. மேற்கொண்டு விசாரணை செய்தால் தான் உண்மையான சூழ்நிலை தெரியவரும். அவற்றின் அடிப்படையிலே வழக்குத் தொடுக்க காவல் துறையினர் முயன்று வருகிறார்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஐந்து பேர்களை ஒரு வீட்டுக்குள்ளே வைத்துப் பூட்டிவிட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது பயங்கரமான கொடுமையான நிலைமை. வீடுகளிலே வைத்துப் பூட்டி தீயிட்டுக் கொளுத்தி விடுவதால் அநேக பேர்களின் உயிர் நஷ்டப்படுகிறது என்ற விஷயம் பல இடங்களிலே நடப்பதை நாம் கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் தடுக்க அந்தக் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அந்த வகையிலே அரசின் சார்பிலே உஷார் தன்மையோடு செயல்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இந்த கேஸிலே முதலிலே 325 செக்ஷன் போடப்பட்டிருக்கிறது. கடைசியிலே 302-வது செக்ஷன் வருகிறது. 5 பேர்களை கொலை செய்த குற்றம் பெரிய குற்றம். அந்த முறையிலே கடுமையான தண்டனையைக் குற்றவாளிக்குக் கொடுக்கின்ற முறையிலே காலத்தை நீட்டிக் கொண்டே போகாமல் கேஸை சீர்குலைத்து சாட்சியம் இல்லாமல் செய்யக்கூடிய நிலைமை இல்லாமல் போலீஸாரை எச்சரித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 325 436, 302 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருக்கின்ற வகையில் அச்சத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே நடவடிக்கையை எடுத்து வருகிறோம். அந்த முறையிலே காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதே நேரத்திலே அந்த அளவுக்கு நீதியும் கிடைக்கவேண்டும். தண்டனையும் கிடைக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அச்சம் ஏற்படும். அந்த வகையிலே இந்த வழக்கை தீவிரமாக நடத்த அரசு முயற்சியை மேற்கொள்ளும்.